

மதுரை மாவட்டம், தமுக்கத்தில் உள்ள தமிழன்னை சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை உலக தமிழ் சங்க துணைத் தலைவர்/ இயக்குநர் பர்வீன் சுல்தானா, சொல்வேந்தர் சுகி.சிவம் உள்ளிட்ட தமிழ் ஆர்வலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் இருளம்பட்டு , சின்னகொசப்பள்ளம்,பெரிய கொசப்பள்ளம், முருகன்குடி, நந்தபாடி, வெண்கருப்பூர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சிவ. தியாகராஜன் செம்பியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. – மேயர் ராமகிருஷ்ணன் முன்னிலை!

# நெல்லையில் ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார் ! மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார் தலைமை!

நெல்லை, ஜன. 6 -

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் ஆசிரியர்களைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் 2024- 25ஆம் கல்வியாண்டில் மாவட்டத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கும் மற்றும் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் ஒளிரும் ஆசிரியர் விருதுகளை சட்ட பேரவைத் தலைவர் மு. அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் தலைமையில், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் ,மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

பள்ளிக்கல்வித் துறை சார்பில் ஆசிரியர்களை கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த 1726 ஆசிரியர்களுக்கு 100 சதவீதம் தேர்ச்சி கொடுத்தமைக்காக பாராட்டு சான்றிதழ்களும் 200 ஆசிரியர்களுக்கு ஒளிரும் ஆசிரியர் விருதுகளும் வழங்கப்பட்டது. சிறந்த பள்ளிகளுக்கான விருது, சிறந்த பள்ளி மேலாண்மை குழுக்கான விருது,சிறந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கான விருது, சிறந்த முன்னாள் மாணவர் அமைப்புக்கான விருது போன்ற விருதுகளை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்டம் கடந்த ஆண்டில் பத்தாம் வகுப்பு தேர்வில் 21 வது இடமும் 12 ஆம் வகுப்பு தேர்வில் 16வது இடமும் பெற்றது. இந்த ஆண்டு அதிக தேர்ச்சியை அழித்து முதல் ஐந்து இடத்திற்குள் வருவதற்காகவும், ஆசிரியர்களை ஊக்கப்படுத்தவதற்காகவும், கடந்த ஆண்டு நூறு சதவீத தேர்ச்சி அளித்த ஆசிரியர்களை கௌரவப்படுத்துவதற்காகவும் ஆசிரியர்களை கொண்டாடுவோம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள ஆசிரியர்களைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமைப்படு கிறேன். சமூகத்தில் ஆசிரியர்கள் மிகவும் உயர்வில் உள்ளார்கள். மாணவர்கள் நல்வழியில் செல்வதற்கும் மற்றும் உயர் பதவி அடைவதற்கும் ஆசிரியர்கள் உறு துணையாக செயல்பட்டு வருகிறார்கள்.ஆசிரியர்களின் பங்களிப்பு சமூகத்தில் மிகவும் முக்கியமானதாக ஒன்றாக கருதப் படுகிறது.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்று கொடுக்கும் ஆசிரியர்கள் தகுதியின் அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள்.அரசு மருத்துவமனை யில் எப்படி தகுதி வாய்ந்த மருத்துவர்கள் இருக்கிறார்களோ அதே போன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.இது பெருமைப்பட கூடிய ஒன்றாக உள்ளது. ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு கொண்டு வந்தது முன்னாள் முதலமைச்சர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள். 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பெண் ஆசிரியர்கள் பாடம் கற்று கொடுக்க வேண்டும் என்ற புதிய விதிமுறைகளை கொண்டு வந்தார்கள். அந்த வழியில் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக சுமார் ரூ.50 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்கள். மெட்ரிக்குலேசன் பாடத்திட்டமும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பாடத்திட்டம் ஒன்றுதான்.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயிலுவதற்கு ஊக்கவிக்கும் வகையில் தமிழ்ப்புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டம் மூலம் மாதம் ரூ.1000 ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.ஆசிரியர் பணி என்பது மிகவும் பெருமைப்பட கூடிய பணி அப்படிப்பட்ட பணியை செய்து வரும் ஆசிரியர்களுக்கு இது போன்ற நிகழ்ச்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ஆசிரியர் பணியை செய்து வரும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு. அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவகுமார்,உதவி திட்ட அலுவலர் அருணா தமிழ்மலர், மாவட்ட கல்வி அலுவலர் சாய் சுப்புலெட்சுமி மற்றும் ஆசிரியர்கள்,அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சா.ஞானதிரவியம் – சிவராஜ் – ஜார்ஜ்கோசல் முன்னிலை!

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் சமத்துவப் பொங்கலை சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்ட கூட்டத்தில் தீர்மானம்! ம.கிரகாம்பெல் தலைமை!

நெல்லை, ஜன. 6 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்ப முன்னாள் எம்.பி. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.ஞான திரவியம், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் ஜனவரி 14, 15 ஆகிய தேதிகளில் சமத்துவப் பொங்கலிட்டு வீடுகள் தோறும் கோலமிட்டு கோலப் போட்டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க சமத்துவ பொங்கல் சிறப்பாக கொண்டாடுவது குறித்தும்,

(SIR) பணியில் தீவிரம் காட்டுவது தொடர்பாகவும்,பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் திராவிடப் பொங்கல் சமூக நீதி திருவிழாவை கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஒருங்கிணைந்த ஒன்றியங்களில் ஆண்கள்,பெண்கள் என தனித்தனியாக போட்டிகள் நடத்த வேண்டும் எனவும், ஜனவரி 14 ,15 ஆகிய தேதிகளில் ‘சமத்துவம் பொங்கட்டும்’ ‘தமிழ்நாடு வெல்லட்டும்’ என எழுதி அனைத்து வீடுகளிலும் கோலமிட்டு கோலப்போட்டிகள் நடத்த வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர்கள் பரமசிவ அய்யப்பன், கனகராஜ்,சாந்தி சுபாஷ்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, போர்வெல் கணேசன்,பி.சி.ராஜன், சுடலை கண்ணு,சுபாஷ் தங்கபாண்டியன்,அலெக்ஸ் அப்பாவு,எரிக்ஜுடு, நகர செயலாளர் மணி சூரியன், பேரூர் செயலாளர்கள் ஜான்கென்னடி, ஆயூப் கான், சேதுராமலிங்கம்,தமிழ்வாணன், கசமுத்து, வானுமாமலை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மல்லிகா அருள், பிரேமா, மாடசாமி, கேசவன்,சகாயபிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வன்பொருள் தொழில்நுட்பக் கோளாறு!

## பதிவுத்துறைத் தலைவர் அறிக்கை!

சென்னை, ஜன. 6 -

“பத்திரப் பதிவுத்துறை வன்பொருளில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறை சரி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்று பத்திரப் பதிவுத் துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது

பத்திரப்பதிவுத்துறை தகவல்களை சேகரித்து வைக்கப்படும் வன்பொருள் ஒன்றில்(Hardware) தொழில்நுட்ப கோளாறு கடந்த சனிக்கிழமை அன்று ஏற்பட்டுள்ளது. இதனை கணினி மென்பொறியாளர்கள் சரி செய்து விட கடந்த இரு தினங்களாக முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர்.

இந்த வன்பொருளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு விரைவில் சரி செய்யப்பட்டு துறையின் மென்பொருள் முறையாக இயங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு பத்திரப்பதிவு தொடர்பான நடவடிக்கைகளை எடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு பத்திரப் பதிவுத் தலைவர் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மதுரை, ஜன. 6 -

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, திராவிடப் பொங்கல் திருவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பகுதி கழகங்கள் சார்பில் 03.01.2026 முதல் 09.01.2026 வரை பகுதி வாரியாக கிரிக்கெட், வாலிபால், கபடி, கால்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம், மிதிவண்டிப்போட்டி, கோகோ என ஆண் - பெண் இருபாலருக்கும் தனித்தனியாக, ஒவ்வொரு பிரிவினருக்கும் விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளது.

கோ.புதூர் பகுதி - தமுக்கம் மைதானம், நரிமேடு பகுதி - ஜவகர்புரம் முனியாண்டி கோவில் மைதானம், செல்லூர் பகுதி - அய்யனார் கோவில் 5வது தெரு விசாலம், கோரிப்பாளையம் பகுதி - பந்தல்குடி திடல், கே.கே.நகர் பகுதி - மானகிரி செல்லத்தம்மன் கோவில் திடல், அண்ணா நகர் பகுதி - MDBA மாநகராட்சி மைதானம் யானை குழாய் அருகில், நெல்பேட்டை பகுதி - இஸ்மாயில்புரம் முனிச்சாலை, தெப்பக்குளம் பகுதி - சித்து பாலகிருஷ்ணன் தெரு திடல், மணிமேகலை பள்ளி கிராண்ட், காமராஜபுரம் பகுதி - லெட்சுமிபுரம் மைதானம் காமராஜர் சாலை, தெற்கு வாசல் பகுதி - இராமசந்திரன் தெற்கு வெளி வீதி, வில்லாபுரம் பகுதி - இன்பா மைதானம் வில்லாபுரம், ஆரப்பாளையம் பகுதி - ஆரப்பாளையம் மந்தை திடல், அரசரடி மைதானம், Y.M.C பள்ளி வளாகம், தத்தனேரி பகுதி - அருள்தாஸ்புரம் மைதானம், சிம்மக்கல் பகுதி - தலைவிரிச்சான் திடல், மேலமாசிவீதி பகுதி - மதுரை கல்லூரி மைதானம் ஆகிய பகுதிகளில் போட்டிகள் நடைபெறும்.

இப்போட்டிகளில் பகுதி கழகங்கள் சார்பாக அணிகள் கலந்து கொள்ள வேண்டும், கலந்து கொள்ளும் அணிகளின் விபரங்களை அந்தந்த பகுதி கழக செயலாளர்கள் www.dravidapongal.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து உறுதி செய்திட வேண்டும். 14. 01.2026 முதல் 15.01.2026 வரை வட்ட கழகங்கள் அளவில் அனைத்து வீடுகள் முன்பும் “சமத்துவம் பொங்கட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ திராவிடப் பொங்கல் கோலமிட்டு, பெண்கள் - குழந்தைகளுக்கான கோலப் போட்டி உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும்.

16.01.2026 முதல் 17. 01.2026 வரை கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, கலை நிகழ்ச்சிகளை நடத்தி, முதலமைச்சர் அவர்களின் சிறப்புச் செய்தியுடன் கூடிய திரைத்திருவிழாவை நடத்திட வேண்டும். மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக, அனைத்து அணிகளும் திராவிடப் பொங்கல் கொண்டாட்டங்களை வெற்றியடையச் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியத்தை இரண்டாக பிரித்து அரசாணை வெளியிட்ட தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களுக்கு நன்றி தெரிவித்து தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ரிஷிவந்தியத்தில் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர், இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், ஒன்றிய சேர்மன் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், செல்வகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் வினிதா மகேந்திரன், கோவிந்த ராஜ், வக்கீல் சீனிவாசன், நிர்வாகிகள் துரைராஜ், இதயத்துல்லா கண்ணன், செல்வம், உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.


# விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

கழகத்தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

உயர்திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆணைக்கிணங்க

# திராவிட பொங்கல் விழா

## விளையாட்டு போட்டிகள்



மாவட்ட கழக பொறுப்பாளர்
டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு

நாள் : 09.01.2026 வெள்ளி, 10.01.2026 சனி, 11.01.2026 ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள்

விளையாட்டு போட்டிகள் விபரம் : ஆண்கள் – கபடி, வாலிபால், ஓட்டபந்தயம்.
பெண்கள் – கபடி, கோ–கோ. ஓட்டபந்தயம்.

### திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி

| வ.எ | பங்கேற்கும் ஒன்றியம் | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | திருக்கோவிலூர் கிழக்கு, மத்திய ஒன்றியம், திருக்கோவிலூர் நகரம், மணம்பூண்டி ஒன்றியம், அரகண்டநல்லூர் பேரூர் | லட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, அரகண்டநல்லூர். |
| 2 | முகையூர் வடக்கு ஒன்றியம், முகையூர் தெற்கு ஒன்றியம் | St சேவியர் மேல்நிலைப்பள்ளி, முகையூர் |
| 3 | திருவெண்ணெய்நல்லூர் மேற்கு, மத்திய ஒன்றியம், திருவெண்ணெய்நல்லூர் பேரூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, சித்திலிங்கமடம் |

### விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி

| | | |
|---|---|---|
| 1 | விக்கிரவாண்டி கிழக்கு, மத்திய, மேற்கு, வடக்கு ஒன்றியம், விக்கிரவாண்டி பேரூர். | சூர்யா பொறியியல் கல்லூரி, விக்கிரவாண்டி. |
| 2 | காணை தெற்கு, மத்திய, வடக்கு ஒன்றியம் கோலியனூர் மேற்கு ஒன்றியம் | ரெட்விங்க்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கெடார். |

இந்த விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்கு, கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர், முனைவர். **க.பொன்முடி** அவர்கள் பரிசளித்து சிறப்பிக்க உள்ளார்கள் அவர்களுடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர். திரு. அன்னியூர் சிவா அவர்களும், மாவட்ட கழக அவைத்தலைவர் திரு. ம.ஜெயச்சந்திரன் அவர்களும் கலந்துகொள்ள உள்ளார்கள். எனவே மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள்,மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் **பொன்.கௌதமசிகாமணி**
மாவட்ட கழக பொறுப்பாளர்
விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.